# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு | 29 மார்ச் 2026

## தவக்கால சிந்தனை 6

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: சூழலியல் - நமது பொது இல்லத்தை சீர்செய்தல்



# “ஒன்றில் நாம் ஒன்றாய் இருக்கிறோம்”

திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு மற்றும் புனித வாரத்திற்கான நமது திருவழிபாட்டு முறைகள் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இது கசப்பும் இனிப்புமான முரண்பாடுகளால் நிறைந்துள்ளது. உயிர்ப்பு ஞாயிறின் மகிழ்ச்சியின் முன்னறிவிப்பு நமக்கு வழங்கப்படுகிறது. ஆனல் புனித வெள்ளியில் இருண்ட எதிர்ப்பார்ப்பும் நமக்குத் தரப்படுகிறது.

குருத்து ஞாயிறு மற்றும் புனித வாரத்தின் நிகழ்வுகள் இந்தப் பாதையைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நம் ஆண்டவர் ஆடம்பரத்திலும் பகட்டிலும் அல்ல, மனத்தாழ்மையுடன் வருகிறார். அனைத்தையும் பலவந்தமாக வெற்றிகொள்ளும் அரசராக அல்ல, மாறாக அன்பு, அருள், இரக்கம் மற்றும் தன் மக்களுக்காக தன்னுயிரையே தருவதன் மூலம் அவர் வெற்றிபெறுகிறார். நாடுகளை அல்ல, உள்ளங்களையும் மனதையும் வெற்றிகொள்கிறார். அவரது செய்தி தற்காலிகமான போர் நிறுத்தம் அல்ல, அமைதி, நீடித்த அமைதி.

நாமும் ஆண்டவரைப் பின்பற்றும்போது, குறிப்பிட்ட அளவிற்கு துன்பம், நிராகரிப்பு, தனிமை மற்றும் மரணத்தின் எதிர்ப்பார்ப்பை எதிர்கொள்வோம். அதிகாரத்தை மதிக்கும் உலகில், நாம் மனத்தாழ்மையை மதிக்க வேண்டும். வலிமையையும் உடல் பலத்தையும் மதிக்கும் உலகில் நாம் அமைதி ஏற்படுத்துபவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம். பிரபலத்தை மதிக்கும் உலகில் விமர்சனங்களையும் அவமானங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். உலகினருக்கு நாம் வாழும் முரண்பாடுகளாக இருக்கவேண்டும். இருப்பினும், எந்தவொரு அச்சமோ பாரபட்சமோ இல்லாமல் கிறிஸ்துவுடன் நடக்கவேண்டும். ஏனென்றால் அவர் சாவின் பள்ளத்தாக்கு வழியாக விண்ணரசில் நிலைவாழ்வை நோக்கி நம்மை வழிநடத்துவார்.

நிறைவாக நமது ஆண்டவரும் அரசருமானவர் அன்பின் உண்மையான அர்த்தத்தை நமக்குக் கற்பிக்கிறார். திருத்தந்தை லியோ ஏழைகளைப் பற்றிய தனது சிந்தனையை இவ்வாறு நிறைவுசெய்கிறார். “அன்பு என்பது எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கையை பார்க்கும் ஒரு வழியாகவும் அதை வாழும் விதமாகவும் இருக்கிறது. எந்த எல்லைகளையும் நிர்ணயிக்காத அன்பு செய்யும் அனைத்து ஆண்களும் பெண்களும் கொண்ட ஒரு திருஅவையே இன்றைய உலகிற்குத் தேவையான திருஅவை (DT #120)

இன்றைய திருப்பலியின் போது, இயேசுவுடன் சீடராக இணைந்திருக்க மன்றாடுவோம். பல ஆண்டுகளாக மக்களின் பாராட்டும் ஏளனமும் வந்துபோகலாம். ஆனால் நான் என்றென்றும் என்னுடன் நிற்கும் அவருக்கும், அவருடைய நற்செய்திக்கும் உண்மையுள்ள அனைவருக்கும் வெகுமதியைத் உறுதியளிக்கும் அரசரின் பக்கம் நிற்கிறேன். நாம் விட்டுக்கொடுக்க நினைக்கும் நேரங்கள் இருக்கும். ஆனால் ஆண்டவரின் குருத்து ஞாயிறின் வாக்குறுதியை நினைவுகூருகிறோம். மனிதர்களிடமிருந்து மனித மரியாதையைத் தேடாதீர்கள். ஆனால் எப்போதும் வாடிப்போகாத கடவுளால் மட்டுமே வழங்கப்படும் விண்ணக மகிமையில் நம் உள்ளங்களை நிலைநிறுத்துங்கள். அவரில் நாம் ஒன்றாய் இருப்போம்.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)
MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**
எசாயா 50: 4-7
திருப்பாடல் 22: 8-9, 17-20, 23-24
பிலிப்பியர் 2: 6-11
மத்தேயு 26: 14-27:66 (அ) 27: 11-54)

குருத்தோலை ஞாயிறு நமக்குச் சொல்வது... சிலுவை மரம் தான் உண்மையான வாழ்வின் மரம்.
– திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

INTERNAL CIRCULATION ONLY
BUL 13/2026

**வழங்கியவர்கள்:** மாமறைமாவட்ட மனிதவள மேம்பாட்டு அலுவலகம்(AOHD)
**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org